**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 144/2019**

பெயர் : ஜான்சேவியர் P.W.1.

த/பெ. : சபரிமுத்து

தேதி : 28.10.2024

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாசா1ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வதற்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு I.A. 2/2024 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அந்த மனு அனுமதிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

வா.சா.ஆ1 ஆன கிரய ஒப்பந்தத்தில் குழி எவ்வளவு என்றோ அல்லது சென்ட் எவ்வளவு என்று கிரய தொகை நிர்ணயம் செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொதுவாக கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்போது ஒரு சென்ட் எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையிலேயே மொத்தத்தொகை குறிப்பிடப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆனது ஊர்பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆன கிரய ஒப்பந்தத்தில் பிரதிவாதிக்கு மேற்படி சொத்து எப்படி கிடைக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ1 ல் தாவா சொத்திற்கான நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இந்த வழக்கை புல எண் 61/6ற்காகதான் தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி புல எண்ணை பொறுத்து தான் நான் ஏற்றுகை, ஆற்றுகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ1.ன் படி பிரதிவாதி நடந்துகொள்ளவில்லை என்று பிரதிவாதிக்கு முன்அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ1 ஆனது நேர்மையான முறையில் ஏற்படவில்லை என்பதால் தான் பிரதிவாதி தரப்பில் 12.08.2011ல் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த மேற்படி அறிவிப்புக்குதான் நான் வாசாஆ2 ஆன பதிலறிவிப்பை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நேர்மையான முறையில் வாசாஆ1ஐ ஏற்படுத்தவில்லை என்பதால் தான் நான் முன்னறிவிப்பை கொடுக்காமல்

பிரதிவாதி கொடுத்த அறிவிப்புக்கு பதிலறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆவணம் நேர்மையான முறையில் ஏற்படவில்லை என்பதால் நான் கோரும் ஏற்றுகை ஆற்றுகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

வாசாஆ1 ஆவணம் நேர்மையான முறையில் ஏற்படாததால் தான் அதில் உள்ள வாசகங்கள் முழுமையாக இடம்பெறவில்லை என்றாலும், பிரதிவாதியை மிரட்டி ஊர்பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் நிரப்பப்படாத பத்திரத்தில் கையொப்பத்தினை மட்டுமே பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆன ஆவணத்தில் தாவா சொத்து எனது வசம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ1ஆன ஆவணம் நேர்மையாக பெறப்பட்டிருந்தால் பிரதிவாதிக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைக்கப்பட்டிருந்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்து பிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

24.04.2006ல் தாவா சொத்தை பிரதிவாதி எனது தந்தையிடமிருந்து பதிவு பெற்ற கிரய ஆவணம் மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் மறுத்து நான் கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 1985ஆண்டு முதல் எனது அனுபவத்தில் உள்ளது என்பதை நான் காட்டுவதற்காக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதி எனக்கு எதிராக O.S.141/2006என்ற வழக்கினை சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் தாவா சொத்தை பொறுத்து பிரச்சனை உள்ள நிலையிலும் வாசாஆ1 ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய அவசியம் பிரதிவாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் வாசாஆ1ஆன ஆவணத்தை ஊர்பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் நான் மிரட்டி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தூய கரத்துடனும், நேர்மையாகவும் வாசாஆ1ஆன ஆவணம் ஏற்படாததால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால்

சரியல்ல. அதனால் தான் வாசாஆ1ஆன ஆவணத்தில் என்ன என்ன விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் எனது தரப்பு வழக்கை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் இல்லை என்பதால், நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**